பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**04 04 2026 SATURDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** அஸ்ஸாம், கேரளம், புதுச்சேரியில் வரும் **9-**ஆம் தேதி நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

**2.** வேட்பாளர்களின் கல்வித்தகுதி, குற்றவியல் தகவல் ஆகியவை குறித்து **ECI Net** செயலி மூலம் தெரிந்துகொள்ளலாம் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

**3.** நாட்டின் போக்குவரத்துத் துறையில் ரயில்வே முக்கிய பங்கு வகிப்பதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

**4.** வளைகுடா நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு வரும் எண்ணெய் கப்பல்கள் சீனாவுக்கு அனுப்பிவைக்கப்படுவதாக வந்த செய்திகள் தவறானது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**5.** ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஆறு விக்கெட் வித்தியாசத்தில் தில்லி அணி வெற்றிபெற்றது.

- இனி விரிவான செய்திகள் —

<<<<<>>>>>

அஸ்ஸாம், கேரளம், புதுச்சேரியில் வரும் 9-ஆம் தேதி நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி, இன்று கேரளம் மாநிலம் திருவல்லா-வில், தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது பேசிய அவர், மேற்காசிய பகுதியில் இந்தியர்கள் குறிப்பாக அங்கு பணிபுரியும் கேரளம் மாநிலத்தை சேர்ந்தவர்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்து வருவதாக தெரிவித்தார்.

வளைகுடா நாடுகளுடன் இந்தியாவின் உறவு வலுவாக இருப்பதால் அங்கு உள்ள இந்தியர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பின்னர் திருவனந்தபுரத்தில் சாலை மார்க்கமாக பிரச்சாரம் மேற்கொண்டார்.

காங்கிரஸ் மூத்த தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு ராகுல்காந்தி ஆலப்புழாவில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது பேசிய அவர், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி ஆட்சிக்கு வந்தால், கேரளம் மாநிலத்தில் மாற்றங்களை கொண்டுவரப்படும் என்று தெரிவித்தார்.

பின்னர் இடுக்கி, எர்ணாகுளம் மாவட்டங்களில் ஐக்கிய ஜனநாயக முன்னணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக அவர் பிரச்சாரம் மேற்கொண்டார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் திரு பினராயி விஜயன் கன்னூர் மாவட்டத்திலும், கட்சியின் பொதுச்செயலாளர் திரு **M A Baby** கோட்டயத்திலும், இடதுசாரி ஜனநாயக முன்னணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்டனர்.

புதுச்சேரியின் மாஹேயில் செய்தியாளர்களிடம் பேசிய புதுச்சேரிக்கான பிஜேபி பொறுப்பாளர் திரு மன்சுக் மாண்டவியா, சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றிபெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

தமிழக வெற்றிக்கழக வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்ட அக்கட்சித் தலைவர் திரு விஜய், தமது கட்சி ஆட்சிக்கு வந்தால் புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து பெற்றுத்தர முயற்சி மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

<<<<<<>>>>>

சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட உள்ள வேட்பாளர்களின் கல்வித்தகுதி, குற்றவியல் தகவல் ஆகியவை குறித்து **ECI Net** செயலி மூலம் தெரிந்துகொள்ளலாம் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

வேட்பாளர்கள் தாக்கல் செய்த பிரமாணப் பத்திரம் இந்த செயலி மூலம் பதிவிறக்கம் செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகிலேயே மிகப்பெரிய தேர்தல் சேவை செயலியான **ECI Net,** தேர்தல் ஆணையத்தின் அனைத்து சேவைகளையும் பெறுவதற்கு ஏதுவாக இந்த செயலி வடிவமைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

நாட்டின் போக்குவரத்துத் துறையில் ரயில்வே முக்கிய பங்கு வகிப்பதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், நாள்தோறும் **25** ஆயிரம் ரயில்கள் இயக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

பயணிகள் மற்றும் சரக்கு ரயில் சேவைகளில் ரயில்வே சாதனை படைத்துள்ளதாக கூறிய அவர், வந்தேபாரத் ரயில் சேவைகள் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கடந்த நிதியாண்டில் ஆயிரத்து 670 மில்லியன் டன் சரக்குகளை கையாண்டு ரயில்வே புதிய சாதனை படைத்துள்ளது.

15 ஆயிரம் ரயில் என்ஜின்களையும், 6 ஆயிரத்து 600-க்கும் மேற்பட்ட LHB ரயில் பெட்டிகளையும் தயாரித்துள்ளதாக ரயில்வே கூறியுள்ளது.

சென்ற நிதியாண்டில் 119 ரயில் நிலையங்கள் அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் புனரமைக்கப்பட்டதாகவும் ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

வளைகுடா நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு வரும் எண்ணெய் கப்பல்கள் சீனாவுக்கு அனுப்பிவைக்கப்படுவதாக வந்த செய்திகள் தவறானது என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஈரான் உள்ளிட்ட மேற்காசிய நாடுகளிலிருந்து தடையின்றி கச்சா எண்ணெய் இறக்குமதி செய்து வருவதாக தெரிவித்துள்ளார்.

கச்சா எண்ணெய் வாங்குவது தொடர்பாக எந்தவித நிதி பிரச்சினையும் இல்லை என்று சுட்டிக்காட்டியுள்ள அவர், இதுதொடர்பான வதந்திகளை நம்ப வேண்டாம் என்று கூறியுள்ளார்.

ஈரானிலிருந்து இந்தியாவின் **Vadinar** துறைமுகத்துக்கு வந்து கொண்டிருந்த எண்ணெய் கப்பல் பணப்பரிவர்த்தனை பிரச்சினை காரணமாக சீனாவுக்கு திருப்பி அனுப்பியதாக வந்த தகவல்களை அவர் நிராகரித்துள்ளார்.

இந்தியா **40**-க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

ஈரானிலிருந்து **44** ஆயிரம் மெட்ரிக் டன் சமையல் எரிவாயு ஏற்றிவந்த **Sea Bird** கப்பலிலிருந்து மங்களூரு துறைமுகத்திற்கு வந்து சேர்ந்ததாக திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

நாட்டின் வளர்ச்சியில் கல்வியின் பங்கு இன்றியமையாதது என்று குடியரசுத் துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பீகார் மாநிலம் **Motihari** -யில் மகாத்மாகாந்தி மத்திய பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், மாணவர்கள் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி முன்னேற வேண்டும் என்று மாணவர்களை அவர் கேட்டுக்கொண்டார்.

பின்னர் மகாத்மா காந்தியின் சத்தியாகிரக நினைவு மண்டபத்தில் மலர் தூவி திரு சி பி ராதாகிருஷ்ணன் மரியாதை செலுத்தினார்.

<<<<<<>>>>>

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை செயலர் திரு **Chanchal Kumar** புனேயில் உள்ள திரைப்பட மற்றும் தொலைக்காட்சி கல்விக்கழகத்தை இன்று ஆய்வு செய்தார்.

தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின்கீழ் செயல்படும் பல்வேறு நிறுவனங்களையும் அவர் பார்வையிட்டார்.

திரைப்பட அரங்கம், **Editing** வசதிகள், திரைப்பட தயாரிப்பு அரங்கங்களை அவர் ஆய்வு செய்தார்.

<<<<<<>>>>>

**Dadra**-வில் எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் நான்கு பேர் உயிரிழந்தனர்.

இன்று காலை நைட்ரஜன் மற்றும் ஆக்சிஜன் சிலிண்டர்களில் நிரப்பும் இடத்தில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இதில், காயமடைந்த நான்கு பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் வாகனங்களும், கட்டிடங்களும் சேதமடைந்ததாக **Dadra** மாவட்ட ஆட்சியர் திரு பிரியங் கிஷோர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

பெட்ரோ கெமிக்கல் பொருட்களுக்கு சுங்கவரி விலக்கு அளித்துள்ளதை வரவேற்பதாக மருத்துவ உபகரணங்கள் ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் நிர்வாக இயக்குநர் திரு பிரவீன்குமார் மிட்டல் தெரிவித்துள்ளார்.

ஆகாஷ்வாணிக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், மத்திய அரசின் இந்த நடவடிக்கை மூலம் மருத்துவ உபகரணங்களின் விலை உயர்வை தடுக்க முடியும் என்று கூறினார்.

மேற்காசிய பிரச்சினை காரணமாக, மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துப்பொருட்களின் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

கடந்த நிதியாண்டில் பயணியர் மற்றும் சரக்கு போக்குவரத்தில் தெற்கு ரயில்வே சிறப்பாக செயல்பட்டுள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பயணியர் போக்குவரத்தில் நான்கு புள்ளி ஒன்பது சதவீதம் வளர்ச்சியடைந்து, 76 கோடியே 76 லட்சம் பேர் பயணம் மேற்கொண்டதாக கூறியுள்ளது.

இதன்மூலம், தெற்கு ரயில்வேக்கு 8 ஆயிரத்து 269 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற நிதியாண்டில் 42 மில்லியன் டன் சரக்குகளை கையாண்டு, 3 ஆயிரத்து 841 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டதாக தெற்கு ரயில்வே கூறியுள்ளது.

<<<<<<>>>>>

துபாய் மீது ஈரான் நடத்திய ட்ரோன் தாக்குதல் வானிலேயே முறியடிக்கப்பட்டது.

இதன் உதிரி பாகங்கள் கட்டிடங்கள் மீது விழுந்ததால் சேதம் ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இருப்பினும், இந்த தாக்குதலில் உயிரிழப்பு ஏதுவும் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

வளைகுடா பகுதியில் உள்ள அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நட்பு நாடுகள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று ஈரான் ராணுவ செய்தித்தொடர்பாளர் இப்ராஹிம் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதனையடுத்து, ஈரான் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

வளைகுடா பகுதியில், அமெரிக்காவின் இரண்டு போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ஈரான் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

நேட்டோ பொதுச்செயலாளர் திரு மார்க் **Rutte,** அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்புடன் வாஷிங்டனில் ஆலோசனை நடத்த உள்ளார்.

அமெரிக்க உள்துறை அமைச்சர் **Marco Rubio,** பாதுகாப்பு அமைச்சர் **Pete Hegseth** உள்ளிட்டோருடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

மேற்காசிய பிரச்சினையில் நேட்டோ உறுப்பு நாடுகள் அமெரிக்காவுக்கு ஆதரவாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று அமெரிக்க அதிபர் குற்றம் சாட்டியதையடுத்து இந்த பேச்சுவார்த்தை முக்கியத்துவம் பெறுகிறது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஆறு விக்கெட் வித்தியாசத்தில் தில்லி அணி வெற்றிபெற்றது.

தில்லியில் நடைபெற்ற இப்போட்டியில், **163** ரன் என்ற வெற்றி இலக்குடன் விளையாடிய தில்லி அணி **19-**ஆவது ஓவரில் **4** விக்கெட் இழப்பிற்கு **164** ரன் எடுத்து வெற்றிபெற்றது.

முதலில் பேட் செய்த மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **6** விக்கெட் இழப்பிற்கு **162** ரன் எடுத்தது.

அகமதாபாதில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள ஆட்டத்தில் குஜராத் அணிக்கு எதிராக டாஸ் வென்ற ராஜஸ்தான் அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

--------------

**Menorca** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Poonacha** இணையும், **Siddhant Banthia** இணையும் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளன

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் **Poonacha -** தாய்லாந்தின் **Isaro** இணை **6-3, 6-1** என்ற செட் கணக்கில், யுக்ரைனின் **Denys Molchanov -** ஜப்பானின் **Seita Watanabe** இணையை வென்றது.

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் **Siddhant Banthia —** பல்கேரியாவின் அலெக்சாண்டர் இணை **6-4, 6-1** என்ற செட் கணக்கில், லித்துவானியாவின் **Edas Butvilas —** போர்ச்சுகலின் **Tiago Pereira** இணையை வென்றது.

**<<<<<<END>>>>>**